**R5338**

# THE DAWN OF THE MORNING
# காலையின் விடியல்

"இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டமும், வெறியும் உள்ளவர்களாய் நடவாமல், பகலில் நடக்கிறவர்களைப்போல சீராய் நடக்கக்கடவோம்."– ரோமர் 13:12.13

உலகமானது நீண்ட காலமாக ஏறக்குறைய இருளிலும் பாவத்திலும் அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் இருந்தது. ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்தில் நுழைந்தது. இந்த இருளானது இன்னும் தொடருகிறது. இருள் பூமியையும் காரிருள் ஜனங்களையும் மூடும். மனிதன் பரம்பரையாக பாவத்தில் பிறக்கிறான் என்றும், சாத்தான் மனுக்குலத்தை மகா சிருஷ்டிகரிடமிருந்து இன்னும் இன்னும் அந்நியப்படுத்தும் நோக்கத்துடன் நிலைமையை அவன் பயன்படுத்திக்கொள்ளுகிறான் என்றும் இப்படியாக முடிந்தவரை நல்லிணக்கம் ஏற்படாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறான் என்றும் இந்த நிலைமையை குறித்து வேதாகமமானது விவரித்துக் கூறுகிறது.

சாத்தான் இருளின் அதிபதி என்று அழைக்கப்படுகிறான். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் அவன் கிரியை நடப்பிக்கிறான். கீழ்ப்படிகிற பிள்ளைகளைக் காட்டிலும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் அதிகமாக இருப்பதால், இந்த காலம் இருளான காலம் என்று சொல்லப்படுகிறது. தேவன் மனுக்குலத்தை இருளிலேயே விட்டுவிடமாட்டார் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. ஆனால் இருளானது நீக்கப்பட்டு, இருளும் சிதறடிக்கப்படும். அதற்கு பதிலாக அவருடைய வெளிச்சம், அவருடைய ஆசீர்வாதம் வரும். சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல தேவனுடைய மகிமையின் அறிவின் ஒளியானது பூமியை நிரப்பும். (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14) இந்த மீட்புக்கான தெய்வீக ஏற்பாடுகள் உலகத்தோற்றத்துக்கு முன்னே செய்யப்பட்டிருந்தது.

## உலகின் ஒளி

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவைகளை கொண்டுவரும்படி ஏறக்குறைய பத்தொன்பது (தற்போது இருபது) நூற்றாண்டுகளுக்கு முன்பு அவர் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தார். முதலாவது நடவடிக்கை மனுக்குலத்தின் இரட்சகராயிருக்கும்படி தமது குமாரனை அனுப்பினது. பரலோக பிதா, ஜோதிகளின் பிதா என்று அழைக்கப்படுகிற அதே பொருளில் நமது கர்த்தர் ஒரு மாபெரும் வெளிச்சம் என்று பேசப்படுகிறார். இயேசு கூறினதாவது: "நான் உலகத்துக்கு ஒளியாக இருக்கிறேன்." மனுக்குலமானது சாத்தானுடைய செல்வாக்கின் கீழும் அவர்களது அபூரண தீர்மானங்களினாலும் அவர்களது சிந்தைகள் திருப்பப்பட்டு இருளின் நிலைமையில் இருக்கிறார்கள். அதன் மூலம் அவர்களாலே சரியான தக்க அறிவு இல்லாதிருக்கிறார்கள். பெரும்பாலானவர்கள் சத்திய வெளிச்சத்தை காண முடியாமல் இருளில் இருக்கிறார்கள் – "இருளானது பூமியை மூடுகிறது."

எனினும் உலகில் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுக்கிற சிலர் இருக்கக்கூடிய சந்தர்ப்பத்திற்கான காரணம் இருக்கிறது என்று நம்புகிறோம். இந்த வகுப்பாரை முதலில் எடுத்துக்கொள்ள தேவன் விரும்புகிறார். இந்த வகுப்பாரின் தெரிந்துகொள்ளுதல் சுவிசேஷயுக முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது. சகல நிலைமைகளும் சாதகமாக இருந்தால் உலகின் பெரும்பாலோர் தவறைக் காட்டிலும் சரியானதை தெரிந்துகொள்வார்கள். அவர்கள் பொருளாதாரத்தில் வசதியாகவும் சமூக நிலைமையில் பிரபலமாகவும் இருந்தால் தவறானவைகளுக்கு ஊழியம் செய்வதைக் காட்டிலும் சரியானவைகளுக்கு ஊழியம் செய்வதை தெரிந்துகொள்ளுவார்கள்.

இவர்கள் உண்மையிலேயே நல்ல ஜனங்கள். அவர்கள் நல்லதையே விரும்புவார்கள். அவர்கள் மிகவும் நீதியாகவும் நல்நடத்தை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் நல்லதை தெரிவு செய்வதில் பலமுள்ளவர்களாயில்லாதிருந்தால், நல்லதிற்காக தங்கள் ஜீவனை கொடுக்க விரும்பமாட்டார்கள். சொல்வதற்கு ஒன்று இருக்கிறது. தேவனுக்காக நான் நேசிக்கிறேன். சொல்வதற்கு இன்னொன்று இருக்கிறது. எனது நேரம், பலம், வளமையை அனைவருக்காகவும் அர்ப்பணிக்கிறேன்.

ஆனால் பிற்பாடு சொல்லப்பட்டவர்களைத்தான் தேவன் இப்பொழுது அழைக்கிறார். அதாவது சத்தியம் மற்றும் நீதிக்காக சிலுவையை எடுக்க விரும்புகிறவர்களைத்தான் அழைக்கிறார். நீதிக்கான அவர்களது அன்பை அவர் பாராட்டுவதாக அவர்களுக்கு உறுதிகூறி தேவன் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்கள் விசுவாச மார்க்கத்தில் தொடர்ந்தால் அவர்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அவருடன் கூட்டாளிகளாக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட வகுப்பாரைத் தான் அவர் தேடிக்கொண்டிருப்பதாக அவர்களிடம் அவர் கூறுகிறார். தேவன் அவர்களுக்கு சுவிசேஷத்தின் மகிமையான நம்பிக்கையை, தெய்வீக சுபாவம் மற்றும் மகிமையை முன் வைத்து, இவர்களை உற்சாகப்படுத்தி ஊக்கமளிக்கிறார்.

## வெளிச்சத்திற்கு ஏற்றாற்போல பொறுப்பு

ஆனால் இவைகளெல்லாம் இரவில் போய்க்கொண்டிருக்கிறது. ஏனெனில் இயேசு உலகிற்கு வந்து, உலகத்திற்கு ஒளியாக இருக்க வேண்டியிருந்தாலும், இந்த ஒளியானது இன்னும் உலகிற்கு வெளிச்சத்தைக் கொடுக்கவில்லை, இருளை சிதறடிக்கவில்லை. யூத ஜனங்கள் சந்திர வெளிச்சத்தை பெற்றிருந்தார்கள். அதாவது அவர்கள் நியாயப்பிரமாணத்தையும் அதன் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருந்தார்கள். சந்திரனானது தனக்கென்று ஒளியில்லாமல், அது சூரிய வெளிச்சத்தை பிரதிபலித்தது. அவர்கள் வெளிச்சத்தில் நடக்க விரும்பியிருந்தால், அவர்களுக்கு சந்திரனின் வெளிச்சம் இருந்தது. ஆனால் அவர்கள் அடிக்கடி வெளிச்சமாகிய நியாயப்பிரமாணத்தை விட்டு விலகி, நிழலில் நடந்தார்கள். யூதர்களுக்கு ஆபிரகாம், தாவீது மற்றும் தீர்க்கதரிசிகள் நட்சத்திரங்களாக இருந்தனர். இவர்கள் அவர்களது பாதைக்கு வெளிச்சத்தைக் கொடுத்தனர்.

ஆனால் இயேசு வந்தபோது, அவர் உலகிற்கு ஒளியாக இருந்தார்; அதாவது அவரே உலகிற்கு ஒளியாக இருக்கும்படி தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவராக இருந்தார். ஆனால் இயேசு ஒரு மனிதனாக எல்லாருக்கும் ஒளியாக இருக்கவில்லை. அவர் மாம்சத்தில் இருந்தபோது அவரிடமிருந்து வந்த வெளிச்சம் அந்த இடத்திற்குரியதாகவே இருந்தது. அது ஒளிர்ந்த அநேகருக்குக்கூட, அவரது வெளிச்சம் தெளிவற்றதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் குருடராகவும் அறியாமையிலும் இருந்தனர். சிலர் வெளிச்சத்தை காணக்கூடியவர்களாகவும் மற்றவர்கள் வெளிச்சத்தை காணமுடியாதவர்களாகவும் இருந்தனர் என்று இயேசு கூறினார். "உங்கள் கண்கள் காண்கிறதினால் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." (மத்தேயு 13:16) சில யூத தலைவர்கள் ஓரளவுக்கு வெளிச்சத்தை பார்த்தார்கள். அவர்கள் பார்த்த அளவுக்கு அவர்களுக்கு பொறுப்பு இருந்தது.

நமது கர்த்தர் அவர்களுக்கு உண்மையான வெளிச்சத்தை கொடுத்தார். ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை பெறக்கூடிய நம்பிக்கையில் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் பரிசுத்தமாயிருக்க வேண்டும் என்பதை நியாயப்பிரமாணத்தின் போதனைகளிலிருந்து அறிந்தார்கள். ஆனால் அதன் உண்மையான திட்ட அளவு எவ்வளவு உயர்ந்தது என்பதை உணரவில்லை. அதன் விளைவாக வெளியரங்கமான சில நடவடிக்கைகளை கைக்கொள்வதால், ஆபிரகாமின் சந்ததியாக ஆக முடியும் என்று நினைத்தார்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்தில் எழுத்துக்களை கடைபிடிப்பதில் ஜாக்கிரதையாக இருங்கள். ஏனெனில் நீங்கள் கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குவீர்கள் என்று கூறினார். மேலும் சிறிய காரியங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்து பெரிய காரியங்களை, முக்கியமானவைகளை விட்டு விடுகிறீர்கள் என்றும் அவர் கூறினார்!

அவர்கள் விதவைகளின் வீடுகளை பட்சிக்கிறார்கள் என்றும் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் நுட்பங்களை பயன்படுத்தி கொண்டு விதவைகளின் சொத்துக்களை அபகரிக்கிறார்கள் என்றும் அவர்களிடம் இயேசு கூறினார். இப்படியாக செய்து அவர்கள் நீதி, அன்பு மற்றும் இரக்கம் நிறைந்த பிரமாணமாகிய தேவனுடைய பிரமாணத்தை மீறினார்கள். சிலர் மட்டுமே உத்தம இஸ்ரயேலராக இருந்தார்கள். இவர்கள் மட்டுமே அந்த ஜாதியிலிருந்து தேர்தெடுக்கப்பட்ட ஆபிரகாமின் சந்ததியாக இருப்பார்கள். (ரோமர் 9;6; கலாத்தியர் 3:16,29)

ஆகையால் தெரிந்தெடுத்தல் நடந்தது. நல்ல ஆவியை, கிறிஸ்து பெற்றிருந்த அதே ஆவியை, நீதியையும், தேவனையும் தேவனுடைய பிரமாணங்களையும் நேசிக்கிற ஆவியை உடையவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களானார்கள். இது போதுமானவர்களாக இல்லாதபடியால், பல்வேறு ஜாதிகளிலிருந்து மற்றவர்களை தேர்ந்தெடுத்தலை தொடர்ந்தார். இயேசு தமது சீஷர்களிடம் கூறியதாவது: "உங்கள் வெளிச்சம் மனுஷர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக்கடவது." மேலும் அவர் விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், மற்றவர்களுக்கு தெரியும்படி விளக்குத் தண்டின் மேல் வையுங்கள் என்றார். ஆகையால் தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் ஒளியாக இருக்கிறார்கள். பரிசுத்த ஆவியை பெற்றவர்கள் மட்டுமே உலகில் உண்மையான ஒளியாக இருக்கிறார்கள். மற்றவர்கள் விஞ்ஞானம், புவியியல், ரசாயனம் போன்றவற்றில் ஒளியை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களது பெரும்பாலான வெளிச்சமானது இருளாக இருக்கிறது. எனினும் நமது கர்த்தர் தேவனுடைய திட்டத்தை ஒளி என்று குறிப்பிடுகிறார்.

அறநெறியில் வெளிச்சத்தை உடையவர்கள் மயக்க வெறி உடையவர்களாக ஆக மாட்டார்கள். புனிதத்தன்மையை கெடுத்தல் போன்ற காரியங்களில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் அந்த திசைகளில் வெளிச்சத்தை பெற்றிருக்கிறார்கள். ஆனால் இது உண்மையான வெளிச்சம் இல்லை. முழு உலகமும் உண்மையான வெளிச்சத்தை இழந்திருக்கிறது. எனினும் அவர்கள் இன்னும் கொஞ்சம் ஆரம்ப வெளிச்சத்தை பெற்றிருக்கிறார்கள். அது மனிதனது மனசாட்சி மற்றும் தார்மீக உணர்வில் சாட்சி பகருகிறது. தர்சு பட்டணத்தானாகிய சவுல் இந்த வெளிச்சத்தை கொஞ்சம் பெற்றிருந்தார். இருந்தும் சபையை துன்பப்படுத்தினார். மனசாட்சி போதுமான வழிகாட்டியாக இல்லை. தேவனுடைய வார்த்தையின் வெளிச்சம் நமக்கு தேவைப்படுகிறது.

பரிசுத்த ஆவி சபையின் வெளிச்சமாக இருக்கிறது. அதன் மூலம் நாம் விசேஷமாக சத்தியத்தில் வழி நடத்தப்படுகிறோம்.

நமக்கு அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனம் உண்டு. இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தை கவனித்திருப்பது நல்லது என்று பரிசுத்த பேதுரு நமக்கு கூறுகிறார். (2 பேதுரு 1:19) நீதிமான்களுடைய பாதையின் வெளிச்சம் ''நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரிய பிரகாசம் போலிருக்கும்.'' நாம் இன்னும் இருளில்தான் இருக்கிறோம். இருள் விலகி, பகல் வரும்வரை இருளில் தான் இருப்போம். பரிசுத்த பேதுரு கூறுவது போல, ''விடியும் வரை,'' இந்த தீர்க்கதரிசன வசனம் நமக்கு தேவை. இப்படியாக ஒரு வேதவாக்கியம் இன்னொரு வேத வாக்கியத்தை தெளிவுபடுத்துகிறதை நாம் பார்க்கிறோம்.

நமது கிறிஸ்தவ நண்பர்களில் அநேகர், கர்த்தர் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் வருவார் என்று அப்போஸ்தலர் கூறுவதாக நினைக்கிறார்கள். ஆனால் நாம் வேத வாக்கியங்களை புரிந்து கொள்ள வரும் போது, தேவன் குறித்த காலத்தையும் நேரத்தையும் வைத்திருக்கிறார் என்பதை அறிகிறோம். மேலும் நாம் தேவனுடைய திட்டத்தை கற்றுக்கொள்ளும் போது, இரவின் நீளத்தையும், பகல் விடியும் நேரத்தையும் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதைக் காண்கிறோம். காலை வந்துகொண்டிருந்தது என்பதையும் இரவானது முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதையும் உணரக்கூடிய போதுமான அறிவை அப்போஸ்தலர் பெற்றிருந்தார். கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் நீதியின் சூரியனாக இருப்பார் என்பதை அவர் அறிந்தார். நாமும் இதை அறிவோம். கிறிஸ்து உலகின் ஒளியாக இருப்பார் என்பதை அவர் அறிந்தார். இதை நாமும் அறிவோம். மேலும் மகிமையடைந்த சபையானது இயேசுவுடன் நீதியின் சூரியனாக இருக்கும் என்பதையும் அது தனது ஆரோக்கியமான கதிர்களுடன் எழும்பி உலகத்தை பிரகாசிப்பித்து, எழும்பச் செய்து ஆசீர்வதிக்கும் என்பதையும் நாம் அறிவோம்.

## விடியலின் அடையாளங்கள்

நாம் தேவனுடைய காலங்களையும், வேளைகளையும் கொஞ்சம் அறிவோம். எனினும் நாளையும் மணியையும் அறிவதற்கும் காலங்களையும் வேளைகளையும் அறிவதற்கும் ஒரு பெரும் வித்தியாசம் இருக்கிறது. உங்கள் போதகர் இந்த காலத்தில் மகா பிரிட்டனுக்கு போக நோக்கங்கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். அந்த காலம் வந்த போது, நல்லது இதுதான் அதற்குரிய காலம் என்று கூறுவீர்கள். ஆம், ஆனால் என்ன நீராவி கப்பலில் செல்வார் என்பதை அறியமாட்டீர்கள். அவர் எத்தனை மணிக்கு லண்டனை அடைவார் என்பதை நாம் அறிவோம் என்று நீங்கள் கூறுவீர்கள். ஆனால் எப்பொழுது கப்பல் புறப்படும் என்பதை அறியோம் என்று கூறுவீர்கள். இப்படியாக கர்த்தர் தமது பிள்ளைகளை இருளில் விடமாட்டேன் என்று உத்திரவாதம் தந்திருக்கிறார். நாம் உலகத்தோடு இருளில் இராதபடிக்கு தேவையான அளவுக்கு வெளிச்சத்தையும் அறிவையும் பெற்றிருப்போம்.

அந்த நாள் நம்மேல் ஒரு திருடனைப்போல் வராது என்று சகோதரர்களாகிய நாம் நிச்சயப்படுத்துகிறோம். அதை எப்படி எதிர்பார்க்க வேண்டும் என்பதை நாம் அறிவோம். நேரத்தை நாம் அறிவோம். அப்போஸ்தலர்கள் இந்த காரியத்தை குறித்து அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறவர்கள் சில வேதவாக்கியங்களை மேலோட்டமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்கிறோம். நாம் பார்த்துக்கொண்டிருக்கிற வசனத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுங்கள். ''இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று.'' பகலானது அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ விடியும் என்று இதன் பொருளாக நினைத்திருக்கிறார்கள்.

## பரிசுத்த பவுல் விசேஷித்த தகவலை பெற்றிருந்தார்

அப்போஸ்தலர் இப்படிப்பட்ட ஒரு யோசனையை வெளியரங்கமாக பெற்றிருக்கவில்லை. ஏனெனில் அவருடைய நிரூபங்களில் ஒன்றில், அந்த நாள் எப்படி வரும் என்றும் அப்பொழுது ஆபத்துக்காலம் இருக்கும் என்றும் கர்த்தர் ஒரு கொடிய வஞ்சகத்தை அனுப்புவார் என்றும் பாவ மனுஷன் முதலில் வெளிப்படுவான் என்றும் விவரிக்கிறார். விசுவாச துரோகம் முந்தி நேரிட்டால் ஒழிய அந்த நாள் வராது என்று சபைக்கு உறுதியளிக்கிறார். அவர் அவர்களை ஞாபகப்படுத்துகிறதாவது: தானியேல் தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடி பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்கப்படும் வரை கர்த்தரின் இந்த நாள் வராது என்பதை இப்பொழுது அறியுங்கள். ''எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.'' (2 தெசலோனிக்கியர் 2 அதிகாரம் முழுவதும்)

கொரிந்துவிலுள்ள சபைக்கு அவரது நிருபத்தில் பரிசுத்த பவுல் கூறியதாவது: ''நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆனால் நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.'' (1கொரிந்தியர் 15:51.52) அவர்கள் நித்திரையடைவதில்லை, என்று பரிசுத்த பவுல் சொன்னதாக ஆதிகால சபை நினைத்தது. ஆனால் பரிசுத்த பவுல் , கிறிஸ்துவின் நாள் வரை சபையினில் சிலர் இருப்பார்கள் என்று கூறி, முழு சபையையும குறிப்பிட்டார். ஒரு இமைப்பொழுதிலே பூமிக்குரிய சரீரத்திலிருந்து வானத்துக்குரிய சரீரத்துக்கு மறுரூபமாக்கப்படுகிறவர்களில் அவர்கள் இல்லை என்பதை பரிசுத்த பவுலும் பேதுருவும் குறிப்பிட்டார்கள்.

ஆகையால் நமது தலைப்பு வசனத்துக்கு வருவோம். அப்போஸ்தலர் பவுல் கர்த்தரிடமிருந்து விசேஷித்த தகவலை பெற்றுக்கொண்டார் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். அப்படியாக அவர் சொல்லுகிறார். அவர் மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அதிகமான காட்சிகளையும் வெளிப்பாடுகளையும் பெற்றிருந்ததாக கூறுகிறார். அவருக்கு அந்த சமயத்தில் சொல்லப்பட்ட காரியங்களை வெளிப்படுத்துவது சரியாக இருக்காது என்று அவர் அறிவிக்கிறார். இந்த காட்சிகளை அவர் வெளிப்படுத்தக்கூடாது. அதன் பொருள் அவருக்கு இரகசியமாக கிடைக்கப்பெற்றன. (2கொரிந்தியர் 12:3) இப்படியாக அப்போஸ்தலருடைய மனது ஒளியூட்டப்பட்டு, அவரால் மகா அறிவுத்திறனுடனும் தெளிவுடனும் வல்லமையுடனும் எழுத முடிந்தது. அதன் மூலம் பரிசுத்த வேதவாக்கியங்களின் மேல் வெளிச்சம் அதிகரிக்கும் தகுந்த காலமாகிய தற்காலத்தில் நாம் அவரது எழுத்துக்களின் ஆழத்தைக் காணவும், சத்தியத்தை அதன் மூலம் கிரகித்துக் கொள்ளவும் முடிகிறது. இல்லையென்றால் அது இயலாததாக இருக்கும். நாம் செய்கிறோம். கிட்டத்தட்ட ஆழ்ந்த காரியங்களின் நமது அறிவு அனைத்தும் பரிசுத்த பவுலின் நிருபங்களிலிருந்து வந்ததாக இருக்கிறது. ஏனெனில் அவர் இந்த வெளிச்சத்தை பெற்றிருந்தார். அவர் எழுதிய அனைத்திலும் அது ஊடுருவியிருந்தது. அப்போஸ்தலர் காலத்தில் பவுல் மட்டுமே அறிந்திருந்த இரகசியமாயிருந்த அநேக காரியங்களை நாம் இன்றைக்கு ஆராயவும் புரிந்து கொள்ளவும் முடிகிறது.

## "கடைசி நாள்"

நமது தலைப்பு வசனத்தில் பேசப்படுவது கடைசி காலத்தை பற்றியதாகும். மார்த்தாள் லாசருவைப் பற்றி கூறுவதாவது: "உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்." (யோவான் 11:24) கடைசி நாள் என்பது எது? அது மாபெரும் ஏழாம் நாள். இந்த நாள் இருளின் காலமல்ல, ஆனால் பகல் வெளிச்சத்தின் காலமாயிருக்கும். அதுஅப்படி இருக்குமானால் மற்ற ஆறு நாட்கள் இருள் மற்றும் பாவத்தின் இரவைக் குறிக்கிறது. புதிய நாளின் காலையில் இருளின் அதிபதியின் ஆளுகை. ஒளியின் அதிபதியால் வீழ்த்தப்பட வேண்டும். இப்படியாக பகலானது வருகையை கட்டியங்கூறும், ஒவ்வொன்றும் ஆயிர வருடங்கள் அடங்கிய மாபெரும் ஆறு நாட்களின் கருத்தில் பார்க்கும் போது, அப்போஸ்தலர்களும் ஆதிகால சபையும் ஐந்தாம் நாளில் வாழ்ந்தார் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும். ஏழாம் நாளுக்கு முன்னதாக மற்றொரு நாள் கடந்து போக வேண்டும். அதன்பிறகு கர்த்தரின் மகிமையின் மாபெரும் பிரகாசம் வரும். இந்த நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் பொழுது அப்போஸ்தலரின் வார்த்தைகள் தெளிவாக இருக்கிறது.

இருண்ட காலத்தில் தேவனுடைய ஜனங்கள் கொஞ்சமாக வெளிச்சமும் அறிவும் பெற அனுமதிக்கப்பட்டார்கள். எனினும் அவர்கள் மாபெரும் அடையாளங்களை பெற்றிருந்தார்கள். ஆகையால் போப்பரசு அபிவிருத்தி அடைந்த போது, இதுதான் முன் கணிக்கப்பட்ட பாவ மனுஷன் என்றும் விசுவாச துரோகம் என்றும் தேவனுடைய ஜனங்கள் கூறினார்கள். இப்படியாக அவர்கள் தங்கள் இடத்தை நிர்ணயித்துக்கொண்டார்கள். இருண்ட காலத்தில் போப்பரசின் பாவ மனுஷன் என்ற தெளிவான புரிந்துகொள்ளுதல் இருந்தது என்று நாம் பார்க்கிறோம். எனினும் ஏற்ற காலத்துக்கு முன்னதாகவே சபையை முழு சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துவது தேவனுடைய நோக்கமல்ல. ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் அந்த நாளையும் மணியையும் நாம் அறிவோம் என்று இப்பொழுது நாம் கூறிக்கொள்ளவில்லை. ஆனால் நாம் காலங்களையும் வேளைகளையும் அறியாதவர்களல்ல.

## "அந்தகாரத்தின் கிரியைகளை தள்ளிவிடுங்கள்"

ஆச்சரியமான நாளின் விடியலைப் பற்றிய இந்த அறிவின் கண்ணோட்டத்தில் அந்த நாளின் ராஜ்ய வகுப்பாராக நம்பிக்கை கொண்டிருக்கிற நாம் இப்பொழுது எப்படி நம்மை நடத்திக்கொள்வோம்? எப்படி நாம் வாழ்வோம்? "நாம் பகலின் பிள்ளைகளாக" இருந்தால் நாம் அதைக் காண்பிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். நாம் தேவனுடைய பிரதிநிதிகளும் ஸ்தானாபதிகளுமாயிருக்கிறோம். சீக்கிரத்தில் வந்து முழு பூமியையும் நிரப்பப்போகிற தேவனுடைய வெளிச்சமும், அறிவு மற்றும் மகிமையைப் பற்றி நாம் ஜனங்களுக்குச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். தற்காலத்தையும் வரப்போகிற மகிமையான நிலைமைகளையும் வேறுபடுத்தி பார்ப்பதற்கு நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். அதன்மூலம் வெளிச்சத்தை விரும்பும் அனைவரும் தேவனுடைய வார்த்தையை கவனித்து ராஜ்ய வகுப்பாரின் அங்கங்களாக தயாராவார்கள்.

நாம் என்ன செய்யவேண்டும்? நாம் அந்தகாரத்தின் கிரியைகளை, சுயநலமாகவும் பாவமாகவும் இருக்கக்கூடிய ஒவ்வொன்றையும் நீக்க வேண்டும். ஏனெனில் சுயநலமாக இருப்பது பாவமாக இருக்கிறது. பாவமாக இருப்பது சுயநலமாக இருக்கிறது. இவைகளையெல்லாம் நாம் நீக்கிப்போட வேண்டும். ஏனெனில் நாம் புதிய ஒழுங்குகளைச் சேர்ந்தவர்கள். முழு ஆய்வுக்கும் நிற்காத எந்த கிரியையும், புது யுகம் வந்த பிறகு அதன் வெளிச்சத்தில் நிற்காத எந்தகிரியையும் இருளின் கிரியைகளாகும். ஆகையால் நாம் புதிய யுகத்தைச் சேர்ந்தவர்கள், பழைய யுகத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, நமது குடியுரிமைக்கும், ஒளியின் அதிபதிக்கு சார்பான பொறுப்புகளுக்கும் இசைவாகவும் இருளின் அதிபதிக்கும் அவனது கிரியைகளுக்கும் வழிகளுக்கும் எதிராகவும் நாம் வாழ வேண்டும்.

## “ஒளியின் ஆயுதங்களை தரித்துக்கொள்ளக்கடவோம்”

நாம் கிறிஸ்துவுடன் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளோம். நாம் நமது புதுசுபாவத்தின் சத்துருக்களுக்கு எதிராக நாம் போரிடுவோம். நாம் கர்த்தருடன் அவரது நீதியின் ராஜ்யத்தில் இணையும்படியாக தேவனுடைய பிள்ளைகளுக்கு பாத்திரர்களாகவும் ஆர்வத்துடன் பாடுபடுகிறவர்களாகவும் இருப்போம். நாம் இருளை நீக்கிப்போடும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக் கொள்ள வேண்டும். ஒளியின் ஆயுதங்கள் எவை? சத்துருவின் ஆயுதத்திலிருந்து காக்கக்கூடியதுதான் இந்த ஆயுதம், இரட்சணியம் என்னும் தலைச்சீராவையும் உள்ளடக்கியது இது. இது நமது பெரிய சத்துருவின் தாக்குதல்களிலிருந்து சத்திய அறிவின் மூலமாக நமது புத்தி அறிவாற்றலை காக்கக்கூடியது.

அப்போஸ்தலர் வலியுறுத்துவது போல நாம், “சத்தியம் என்னும் கச்சையை நம் அரையில் கட்டினவர்களாயும், நீதி என்னும் மார்க்கவசத்தை தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயுதம் என்னும் பாதரட்சையை கால்களில் தொடுத்தவர்களாயும் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாக, எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்றும் கேடகத்தை பிடித்துக் கொண்டவர்களாயும் நிற்போமாக. இரட்சணியமென்னும் தலைச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுவோமாக.” (எபேசியர் 6:14-17) இதுதான் ஆயுதம். இதைக்கொண்டு தான் விழுந்துபோன சுபாவத்தின் தீமையான போக்கின் மூலம் வருகிற தாக்குதல்களில் நாம் நிலைத்து நிற்க வேண்டும்.கிறிஸ்துவின் மூலம் நாம் “முற்றும் ஜெயங்கொண்டவர்களாகவும்” வர முடியும். ஜெயங்கொண்டவர்கள் என்ற மகிமையின் கட்டுடன் நாம் காலை விடிந்து வருகிற அந்த மகிமையான நாளில் தேவனுடைய ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் ஆக்கப்படுவோம்.

## பரிசுத்தமான நோக்கத்தில் வெளிச்சம் வெளிப்படுகிறது

தீமை மற்றும் பாவம் பரவியிருக்கிற, வருத்தம், பாவம் மற்றும் மரணம் உள்ள இரவு காலத்திற்கு மாறாக வரப்போகிற பகலைப் பற்றி உருவக பாஷையில் அப்போஸ்தலர் தொடர்கிறார். தீமை செய்பவர்கள் இருளையே விரும்புகிறார்கள் என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. அவர்களது நோக்கமும் இலக்கும் தெரியாமல் இருக்கும்படியாக இருளையே விரும்புகிறார்கள். ஏனெனில் அதை இரகசியமாக அவர்கள் செய்வது வெளிச்சத்தில் தெரியக்கூடாது என்றும் பொதுவாக எல்லாருக்கும் திறக்கப்படக்கூடாது என்றும் விரும்புகிறார்கள்.

பிறகு சபையின் மனப்போக்கு எப்படி இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் விவாதிக்கிறார். பகலில் நடக்கிறவர்கள் போல் சீராய் நடக்கக்கடவோம். சீராய் என்பது மனசாட்சியின்படியாகும். வெளியரங்கமாய் என்பது நமது நோக்கத்தை உலகத்தார் புரிந்துகொள்ள முடியுமென்றால், அவர்களுக்கு நாம் இரகசியமாக இருக்க வேண்டியதில்லை என்பதாகும். நமக்கு எந்தவித கெட்ட நோக்கம் இல்லை என்பதையும், அது சுத்தமானதாக, நேர்மையானதாக. நல்ல நோக்கத்துடன் என்பதை அவர்கள் அறிவார்கள். நமது கர்த்தர் உலகின் மாபெரும் ஒளியாக இருந்தார். ஆனால் அவர் தவறாக புரிந்துகொள்ளப்பட்டு, தவறாக சித்தரிக்கப்பட்டார். ஆகையால் அவரது சீஷர்கள் அனைவரும் அதற்கேற்றபடி ஒளியை உடையவர்களாக இருப்பதால், தன்னுடைய பிடி மனிதர்கள் மேல் நிலைத்திருக்கும்படி நாடுகிற சாத்தானிடமிருந்து தாக்குதலுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது.

எனினும் நமக்கு சேதம் அதிகமாக அல்லது குறைவாக இருந்தாலும், நமது வாழ்க்கையின் முழு மார்க்கமும் நேர்மையானதாக, நேரானதாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கை நீதிக்காக அர்ப்பணிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். நமது வாழ்க்கையில் ஏதும் நீதிக்கு மாறானதாக இராதபடி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். தீமையானவைகளெல்லாம் வெளிப்படுத்தப்படுகிற நாளைப்போல நமதுஅனைவரின் வாழ்க்கையை உண்மையும் நேர்மையும் வெளியரங்கமாக்க வேண்டும். நன்மையானவைகளை காண்பித்து, தீய செயல்களை வெளிப்படுத்தி, இப்படியாக இவர்களது குணலட்சணத்தை அறியும்படி செய்து, கர்த்தர் மனிதர்களை எதை விரும்புகிறார்கள் என்ற சோதனையில் வைப்பார்.

தீமையையும் துன்மார்க்கத்தையும் விரும்புகிறவர்கள் அவர்கள் அதன் உண்மை நிறத்தை பார்த்து, அது எங்கே வழிநடத்துகிறது என்பதையும் அதின் விளைவுகளையும் பார்த்த பிறகு நன்மையை அல்லது தீமையை, ஒளியை அல்லது இருளை அறியவும் தேர்ந்தெடுக்கவும் முழு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு, இருளை தேர்ந்தெடுக்கிறவர்களுக்கு தேவன் கொடுப்பது இரண்டாம் மரணமாகும். தீமைக்கு கடைசியான பரிசும் தண்டனையும் அழிவும் தான். “துன்மார்க்கர் யாவரையும் தேவன் அழிப்பார்.”

பரந்த அளவில் கர்த்தரின் நாளில், கிறிஸ்துவின் நாளில், ஆயிர வருட நாளில் ஒளியானது பரவும். இருளில் மறைந்திருக்கும் அனைத்தும் அம்பலப்படுத்தப்படும். இவைகளை விரும்புகிறவர்கள் நஷ்டத்தை அனுபவிப்பார்கள். வெளிச்சத்தை விரும்புகிற அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டு மனித பூரணத்திற்கு முன்னேற்றம் அடைவார்கள்.

## மாம்சீக பலவீனத்தை ஜெயங்கொள்ளுவது எப்படி

ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவும் இருக்கவும், கிறிஸ்துவுடன் ஆளுகை செய்யவும் உலகத்தின் நியாயாதிபதிகளாகவும் இருக்கவும் நம்பிக்கை கொண்டிருக்கிற சபை அங்கங்களின் நடத்தை முடிந்தவரை தேவனுடைய திட்ட அளவுக்கு இசைவாக இருக்க வேண்டும். கர்த்தருடைய அல்லது வேறு யாருடைய விசாரணைக்கு உட்படும்படியாக எல்லாம் நேர்மையாகவும் வெளியரங்கமாகவும் இருக்க வேண்டும். இப்படியாக வாழ்ந்து நமது விசுவாசத்தை கர்த்தருக்கு

நிரூபிப்போம். துன்பத்தையும் தாக்குதல்களையும் சகிக்க விருப்பமாயிருந்து, நமது பிடிவாதத்தை அவருக்கு நிரூபிக்க வேண்டும். நமது மானிட பலவீனங்களையும் அபூரணங்களையும் ஜெயங்கொள்ளுவதற்கு நாம் மிகுந்த ஆர்வத்துடன் முயற்சி செய்ய வேண்டும். இப்படியாக தேவனிடத்திலும் நீதியினிடத்திலும் நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். இந்த மகிமையான கொள்கைகளுக்கு நமது கர்த்தராகிய கிறிஸ்து உருவகமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இதற்காகவே தேவன் நிற்கிறார். நாமும் அவரைப் போல அவரது மாதிரியாக இருக்கவேண்டும்.

தற்கால அதன் பரிசு ஏதுவாக இருந்தாலும், இருளின் பிள்ளைகளாக இராமல், வெளிச்சத்தின் கீழ், தேவன் பக்கம் இருக்க விருப்பங்கொள்ளும்படியாக, தேவனுடைய கிருபையான குணலட்சணம் மற்றும் முறைமைகளில் மேல் அன்பு செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் நாம் பகலின் பிள்ளைகளாக, வெளிச்சத்தின் பிள்ளைகளாக நாம் நடப்போமாக. இப்படியாக மேலே நமது பொக்கிஷங்களை சேர்த்து வைப்போமாக. ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்க நாடுகிறவர்களுக்கும் தம்மை நேசிக்கிறவர்களுக்கு கர்த்தர் வைத்திருக்கிற மகிமையானவைகளுக்கும் நாம் நம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

“அவர் நம்மை விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதும் இல்லை;

அவர் தமது நித்திய உடன்படிக்கையை ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை;

அவரது வாக்குத்தத்தத்தில் இளைப்பாறி, எதற்காக நாம் பயப்படவேண்டும்?

வருகிற வருடத்திற்கு தேவனே போதுமானவராக இருக்கிறார்.

பகலின் பிள்ளைகளே, இனிமேலும் பயப்படாதிருங்கள்,

ஏனெனில் அவரது வார்த்தை ஒழிந்துபோகாது.”

## களியாட்டம் மற்றும் வெறிகளின் மொத்த உருவம்

நமது தலைப்பு வசனத்தின் முந்திய வசனத்தில் தன்னிலையில் சொல்லப்பட்ட நாம், நமது என்ற வார்த்தைகளிலிருந்து அப்போஸ்தலர் தன்னையும் உள்ளடக்கிய சபைக்கு பேசிக்கொண்டிருக்கிறார் என்பது தெளிவாக தெரிகிறது. உண்மையிலேயே நிருபத்திற்கு முன்னுரை இது தான் காரியம் என்று காண்பிக்கிறது. பரிசுத்த பவுல், உலகின் மனோபாவத்திற்கு மாறாக சபையின் மார்க்கம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று இங்கே காண்பிக்கிறார். “நடக்கக்கடவோம்” என்று அவர் சொல்லும் போது, களியாட்டம் மற்றும் வெறிகள் போன்ற வழியில் நடவாமல், நாம் தினமும் முன்னேறுவோமாக என்ற பொருளில் கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுதாவது ஒரு தவறினால் மேற்கொள்ளப்பட மாட்டார்கள் என்று அவர் கூறவில்லை. இப்படியாக அவர்கள் மேற்கொள்ளப்பட்டால் அவர்கள் இயேசுவின் அடிச்சுவட்டில் நடக்காமல், எதிர்த்திசையில் நடப்பதாக அவர்கள் அறிய வேண்டும்.

சபையானது அந்த சமயத்தில் முழுவதும் வளர்ச்சி அடையாமல் கரு நிலையில் அபூரணமாக இருந்தது என்பதை நாம் நினைவுகூர வேண்டும். புது சிருஷ்டியானது தனது சொந்த சரீரத்தை உடையதாக இராமல், தேவனுடைய சத்துருவாகிய பூமிக்குரிய சரீரமே கொடுக்கப்பட்டிருந்தது. புது சிருஷ்டியானது இதையே கருவியாக பயன்படுத்த கடமைப்பட்டிருந்தது. புது சிருஷ்டியாக அவன் இறுதியில், மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படி நியாயந்தீர்க்கப்படுவான். ஏனெனில் தெரியாமல் செய்த குற்றங்களை கர்த்தர் ஈடுசெய்வார். பாவத்திற்கு கருவியாயிருந்த இந்த சரீரங்களை நீதியின் ஊழியத்திற்கு வைக்க மாட்டார். நமது தற்கால அனுபவங்கள் அனைத்தும் மாம்சத்தில் இருக்க வேண்டும்.ஏனெனில் வேறு எந்த கருவியும் ஊழியத்திற்கு நமக்கு இல்லை.

நாம் களியாட்டம் மற்றும் வெறிகளுக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில் இவைகள் எல்லாம் உலகத்திற்குரியவைகள். பழங்கால பச்சனாலியன் கொடூரங்கள் சமூகத்தால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படாத காலத்தில் நாம் வாழ்கிறோம். அநேகர் இதை இரகசியமாக அப்பியாசப்படுத்தலாம். ஆனால் இது சமூகத்தில் இருப்பது ஞானமானது அல்ல என்று அவர்கள் நினைக்கிறார்கள். மதுபானத்தில் விருப்பம் உள்ளவர்கள் மதுபானம் தயாரிப்பாளர்கள், மதுபான கடைக்காரர்கள் முதலானவர்கள் முன் காலத்தைப்போல அவர்கள் செய்ய முடியாது என்பதையும் ஒரு மிருக போதைக்கு போகும் வரை மதுபானத்தை விற்க முடியாது என்பதையும் உணருகிறார்கள். இந்த எல்லா தீமைகளும், புது இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது விரட்டப்படும்.

## கர்த்தரின் ஆவி தெளிந்த புத்தியின் ஆவி

உண்மையான கிறிஸ்தவன் கர்த்தரின் சிந்தையை பெற்றிருக்கிறான். கர்த்தரின் சிந்தையானது எந்தவிதமான வெறிகளின் சுபாவத்திற்கும் முற்றிலும் மாறானது. கர்த்தரின் ஆவி ஒரு நிதானமான சிந்தையை, ஆலோசனை பண்ணுகிற சிந்தையை, நியாயமான சிந்தையை கொடுக்கிறது. களியாட்டம் மற்றும் வெறிகள் அனைத்தும்

குழப்ப சிந்தையையும் போதையையும் தருகிறது. இப்படிப்பட்ட எந்த ஒரு வகையுடனும் கூட புது சிருஷ்டியானது தயை காண்பிக்க வேண்டும் என்று நாம் நினைக்கக்கூடாது. சில புது சிருஷ்டிகள் அவர்களது நடக்கையில் அக்கறையற்றவர்களாவார்கள் என்பது அப்போஸ்தலரின் ஆலோசனை அல்ல. புது சிருஷ்டி வளர்ந்து அதிக அனுபவம் பெறுவதால், உலகத்தனத்திற்கும் தகாத செயல்களுக்கும் வழி நடத்துகிற நிலைமைகள் மற்றும் சகல இடங்களை தவிர்ப்பதே நல்ல மார்க்கம் என்பதை அவன் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் தனது சிந்தைக்கு புது பொழுது போக்கை பெறவும் தனது மனதை புதிய திசையில், பரலோக காரியங்களில் திருப்பவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

பழங்காலத்தில் இருந்த சில கொடூரங்களை நாம் இப்போது பெற்றிருப்பது உண்மையாக இருந்தாலும் தற்காலத்தில் மிகவும் நாகரீகமான களியாட்டம் மற்றும் வெறிகளை பெற்றிருக்கிறது என்பதும் உண்மையாக இருக்கிறது. கட்டுக்கடங்காமல் போகக்கூடிய, அதாவது அறிவுக்கும் பொருந்தாத ஒழுங்கற்ற சமூக நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இந்த குறை கூறுவதை பேர் கிறிஸ்தவ சபைகளுக்கும் பொருத்தலாம். ஒரு வகையான களியாட்டத்தைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மகா பாபிலோன் பூமியின் குடிகளை தனது மதுவினால் வெறிக்கச் செய்தாள் என்று வாசிக்கிறோம். இது சில விஷயங்களில் மனதின் திகைக்க வைக்கக்கூடிய ஒன்றாகவும் மற்ற காரியங்கள் பைத்தியக்கார நிலைமையாகவும் இருக்கின்றன.

ஒரு காலத்தில் நம்புவதற்கு எந்தவித உண்மையான காரணம் இல்லாமல் நாம் நம்பினோம். உதாரணத்திற்கு தீ பற்ற முடியாத பிசாசுகள், நித்திய அக்கினிகள், மனுக்குலத்தை வறுத்தெடுத்தல் முதலானவைகள். ஆனால் அவைகள் கொடுமையான கனவுகளின் கொடுந்தேவதைகளாக இருந்தன என்பதைக் காண்கிறோம். தேவன் தம்முடைய வல்லமையுள்ள சக்திகளை, தமது சிருஷ்டிகளை காயப்படுத்தவும் தேவையற்ற கொடுமை செய்யவும் பயன்படுத்துவதில்லை. நாம் தப்பறையான போதகம் என்ற மதுவினால் தீவிரமான மயக்க வெறி கொண்டவர்களாக்கப்பட்டோம். நாம் இப்பொழுது நிதானமடைந்திருக்கிறோம். இப்பொழுது ஜனங்கள் கண் விழிக்கவும் தப்பறைகளின் முட்டாள்தனத்தின் விளைவுகளை ஜெயங்கொள்ளவும் முயற்சிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

சிலர் இந்த தப்பறைகளிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். ஆனால் சிலர் மூர்க்க வெறி கொண்டிருக்கிறார்கள். இவர்களில் சிலர் நம்மை தாக்குகிறார்கள். நம்மை அழித்து விடுவதைப் போல அவர்கள் ஏவுகிறார்கள். அது தான் சத்தியம் என்று தப்பறைக்காக போராடுகிறார்கள். அவர்களது போரில் அவதூறு, வன்மம், பகைகள், சண்டைகள் மற்றும் மாம்சம் மற்றும் பிசாசின் மற்ற பல்வேறு கிரியைகளையும் பயன்படுத்துகிறார்கள். அவர்களது ஆயுதங்களின் தேர்வு, அவர்கள் தப்பறையின் போதனைகளால் குருடாக்கப்பட்டு மாயையின் கீழ் இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு ஆதாரமாக இருக்கிறது

## மத போதை (வெறி)

கூட்டங்களில் பெருங்களிப்பு உண்டாகும் அளவுக்கு சில சமயங்களில் களியாட்டம் இருக்கிறது. எல்லா வகையான களிப்பும், தீய ஆவிகள் மற்றும் பேய்கள் இருந்த ஒரு மத கூட்டத்தில் நாங்கள் ஒரு தடவை இருந்தோம். எனினும் ஜனங்கள் வெளியரங்கமாக உண்மையுள்ளவர்களாகவும் நேர்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இது சில வருடங்களுக்கு முன்பு நடந்தது. போதகர் பிரசங்க மேடையை அடித்தார். அப்பொழுது இரண்டு அல்லது மூன்று பேர் ஜெபம் முதலானவைகளை செய்ய முயற்சித்தனர். அது ஒரு வழக்கமான செயல்பாடாக இருந்தது. வாலிப ஜனங்கள் அங்கே போய் கடலைகளை சாப்பிட்டுக்கொண்டு கேலியாக சிரித்துக்கொண்டும் கொக்கரித்துக் கொண்டும் சர்க்கஸில் நடப்பது போல காணப்பட்டது. இந்த ஜனங்கள் வெளியரங்கமாக வெறியில் இருந்தார்கள். அது ஒரு வகையான மோசமான மதுவாக இருந்தது.

இந்த கொள்கை கடந்த கால தப்பறைகளிலிருந்து விடுவித்துக்கொண்ட சிலருக்கு பொருந்தும். சத்தியத்துக்குள் வந்திருக்கும் சிலரிடம் அராஜக ஆவி, ஒழுக்கக்குறைவான நடத்தை இருக்கிறது. சில சமயத்தில் அது வேதாகம கூட்டத்திலேயே வெளிப்படும். அவர்கள் தங்களது சொந்த கலவரத்தில் ஈடுபடுவார்கள். அவர்கள் தப்பறையான ஆவியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் இன்னும் நீதியின் கொள்கைகளை அப்பியாசப்படுத்தவில்லை. தங்களது நடத்தைக்கு கர்த்தரின் ஆவியை, தெளிந்த புத்தியுள்ள ஆவியை அப்பியாசப்படுத்தவில்லை.

கலவர ஆவியை காண்பிக்கிறவர் சில சமயங்களில் வகுப்பின் தலைவராக இருப்பார். அப்படிப்பட்ட சமயத்தில் என்ன செய்யப்பட வேண்டும் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. எந்த ஒரு சகோதரனும் எந்த ஒரு காரியத்தைக் குறித்தும் தனது சொந்த கருத்தை கொண்டிருக்க உரிமை உண்டு. ஆனால் இதை மற்றவர்கள் மேல் திணித்து மீறுவதற்கு உரிமையில்லை. அப்படி செய்வது கர்த்தரின் ஆவிக்கு எதிரானது. அந்த வழியில் நாம் நடக்கக்கூடாது. மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமா அதையே நாம் மற்றவருக்கு செய்ய வேண்டும் என்கிற பொன்னான பிரமாணத்தின் வழியில் நாம் ஜாக்கிரதையுடனும் ஜெபத்துடனும் நடக்க வேண்டும்.

“அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி” பரிசுத்தவான்களாக ஆகும்படி நாம் நடப்போமாக.